**<u>O.S.No.43/2017</u>**

<u>வா.சா.2</u> திரு.ஆறுமுகம், க/பெ.சோனை.
நாள் : 27.04.2023 நேரம் : 12.30 P.M

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்–</u>**

1)நான் எட்டாம் வகுப்பு வரை கீரனூர் கிராமத்தில் படித்தேன். அதன் பின்பு நான் எனது படிப்பை நிறுத்திவிட்டேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விசயங்கள் எனக்கு தெரியும். பிராது பாரா 4 மற்றும் 5 ல் உள்ள சங்கதிகள் தான் எனது நிரூபண வாக்மூலத்திலும் காணப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வாதிகளுக்கு தாவா சொத்தை பொறுத்து எந்தவிதமான இடைஞ்சலும் செய்யக்கூடாதென்று கூறி உறுத்துக்கட்டளை பரிகாரம் தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி விவரத்தை வாதி தான் கூறினார் என்று சொன்னதாக நிரூபண வாக்குமூலத்தில் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

2)தற்போது எனக்கு வயது 51 என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வாதி சீனிவாசன் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் அவருக்கு வயது 41 என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கூறியுள்ள நிரூபண வாக்குமூலத்தில் 1967 ஆண்டில் வாதி பிறந்திருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. தாவா சொத்தை பொறுத்து வாதிக்கு எந்தவிதமான முன் பாத்தியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு தாவா சொத்தை பொறுத்து பாத்திய அனுபவம் இருந்திருந்தால் அவர் பெயரில் உள்ள ஆவணங்களை தாக்கல் செய்திருப்பார் என்று சொன்னால் சரிதான்.

3)ஆவணங்கள் ஏதும் வாதியால் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அவருக்கு உரிமை இல்லை என்று அர்த்தம் என்றால் சரிதான். என்னை சாட்சி சொல்ல அழைத்து வந்தது வாதி சீனிவாசன் தான் அழைத்து வந்தார். இன்றைய தேதியிலிருந்து எனது பிறந்த நாளை கணக்கிட்டால் நான் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள 08.07.1967 தேதியில் எனக்கு 4 அல்லது 5 வயதுதான் இருந்திருக்கும் என்று சொன்னால் சரிதான். 08.07.1967 தேதியில் யார் யார் எந்தெந்த சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்பது எனக்கு சிறு வயது என்பதால் எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்று சொன்னால் சரிதான்.

4)எனது நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்தை ஒத்தியின் அடிப்படையில் வாதியின் முன்னோர்கள் தான் அனுபவித்து வந்தார்கள் என்று கூறியிருப்பது சரியா தவறா என்றால் சரிதான். அவ்வாறு வாதியின் முன்னோர்கள் தாவா சொத்தை அனுபவம் செய்திருந்தால் அவர்கள் பெயரில் வருவாய் ஆவணம் ஏற்பட்டிருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சொத்தை அனுபவம் செய்தால் வரி ரசீது போடுவார்கள் என்று சொன்னால் சரிதான்.

5)வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியாது. வாதியோ, வாதியின் முன்னோர்களோ தாவா சொத்தை அனுபவம் செய்யவில்லை என்பதால் தான் அவர்கள் வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி எந்த சர்வே எண்ணுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சர்வே எண்.120 என்று மட்டும் தெரியும். உட்பிரிவு தெரியாது. தற்போது சர்வே எண். 120/1ஏ1 மகரஜோதி பெயரில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

6)வழக்கு தாக்கல் செய்யும் போது வாதி சீனிவாசன் பெயரில் ஆவணங்கள் இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து வாதி சீனிவாசன் பெயரில் எந்தவிதமான ஆவணங்களும் தாக்கல் செய்யாததால் நான் இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து வாதி சீனிவாசனுக்கு பாத்தியம் என்று எந்தவிதமான பரிகாரம் கோரி கூறவில்லை என்றால் சரிதான். சர்வே எண். 120/2 தான் வாதியின் முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

7)வாதிக்கு அவர்களின் முன்னோர்களான தவசிப்பகடை, ஆண்டி, கருப்பன், நந்தன் ஆகியோர்களுக்குதான் பாத்தியம் உள்ளது என்றால் அவர்கள் எல்லாம் பங்காளிகள் தான். நான் எந்தவிதமான வழக்கும் தாக்கல் செய்யவில்லை. வாதியின் தகப்பனாரான நாதன் பெயரில் பட்டா ரசீது ஏற்பட்டிருக்கும் என்றாலும் பட்டா ரசீது ஏற்படவில்லை என்றால் அவருக்கு பாத்தியம் இல்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து வாதிக்கோ வாதியின் முன்னோர்கோ எந்தவிதமான அனுபவமும் இல்லாததால் வாதி பிராதில் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 1.00 P.M

சாட்சியின் கையொப்பம்.